செய்தி வெளியீடு எண்:012 நாள்: 04.01.2017

# செய்தி வெளியீடு

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2017–ன் இறுதி வாக்காளர் பட்டியல்கள் 05.01.2017 அன்று வெளியிடப்படவுள்ளன.

01.01.2017–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 01.09.2016 அன்று வரைவுப் பட்டியல் வெளியீட்டுடன் தொடங்கியது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/நீக்க/திருத்த/இடம் மாற்றம் செய்ய விண்ணப்பங்கள் 01.09.2016– ஆம் தேதியிலிருந்து 30.09.2016– ஆம் தேதிவரை பெறப்பட்டன.

மேற்கண்ட சிறப்பு சுருக்கமுறை திருத்த காலத்தின்போது வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் / நீக்கல் / திருத்தல் / இடமாற்றம் செய்தல் ஆகியவற்றிற்காக கீழ்க்கண்டவாறு விண்ணப்பங்கள் பெறப்பட்டு தீர்வு செய்யப்பட்டன.

| | பெறப்பட்ட விண்ணப்பங்கள் | ஏற்கப்பட்டவை | % |
|---|---|---|---|
| பெயர் சேர்த்தல் | 1585603 | 1504233 | 94.86% |

| | |
|---|---|
| இடப்பெயர்ச்சி, இறப்பு மற்றும் இரட்டைப் பதிவு ஆகியவற்றின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட நீக்கல்கள் | 3,84,369 |

| | பெறப்பட்ட விண்ணப்பங்கள் | ஏற்கப்பட்டவை |
|---|---|---|
| திருத்தல்கள் | 10,50,192 | 10,46,784 |

| | பெறப்பட்ட விண்ணப்பங்கள் | ஏற்கப்பட்டவை |
|---|---|---|
| தொகுதிக்குள்ளேயே முகவரி மாற்றம் | 2,51,257 | 2,33,561 |

2017 சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்தின் இறுதி வாக்காளர் பட்டியலின்படி தமிழ்நாட்டில் தற்போது 5.92 கோடி வாக்காளர்கள் (ஆண் வாக்காளர்கள் – 2.93 கோடி, பெண் வாக்காளர்கள் – 2.99 கோடி மற்றும் மூன்றாம் பாலினத்தவர் 5040) பதிவு செய்யப்பட்டுள்ளனர். வாக்காளர்

பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2016–இல் வாக்காளர் பட்டியலில் கூடுதலாக சேர்க்கப்பட்ட நிகர வாக்காளர்களின் எண்ணிக்கை 10.22 இலட்சம் ஆகும். புதிய வாக்காளர்களுக்கு வழங்கப்படுவதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டு வருகின்றன. இவை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் 10.02.2017 வாக்கில் வழங்கப்படும்.

மேலும், இறுதி வாக்காளர் பட்டியல்களின்படி, தமிழ்நாட்டிலேயே அதிக அளவு வாக்காளர்கள் கொண்ட சட்டமன்றத் தொகுதி காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள 27.சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியாகும். இத்தொகுதியில் மொத்தம் 6,22,333 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 3,12,816 பெண்கள் 3,09,443 , மூன்றாம் பாலினத்தவர் 74 ). இத்தொகுதியில் 18–19 வயதுடைய 7935 இளைய வாக்காளர்கள் உள்ளனர் (ஆண்கள் 4278 , பெண்கள் 3657).

மாறாக, தமிழ்நாட்டிலேயே குறைந்த அளவு வாக்காளர்கள் கொண்ட சட்டமன்றத் தொகுதி நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள 164.கீழ்வேளூர் (தனி) சட்டமன்றத் தொகுதியாகும். இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,66,920 ஆவர். (ஆண்கள் 82,515, பெண்கள் 84,404 மூன்றாம் பாலினத்தவர் 1).

பணித்தொகுதி வாக்காளர் அதிகமுள்ள சட்டமன்றத் தொகுதி மதுரை மாவட்டத்திலுள்ள 196. திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியாகும் ( 2806 பேர்).

வெளிநாடுவாழ் வாக்காளர்கள் 624 பேரின் பெயர்களும் வாக்காளர் பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல்களை, தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான http://elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் காணலாம்.

வாக்காளர் பட்டியல் தொடர் திருத்த நடைமுறை தற்போது செயல்பாட்டிலுள்ளது. தகுதியுள்ள எவரும் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெறாமலிருந்தால், பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம். தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளத்தின் மூலமாக இணைய வழியில் விண்ணப்பிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**